# கிராமிய சேவைத் திட்டம்

---

**ஈரோடு மண்டலம்**
**ஈரோடு மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை**
**சின்னியம்பாளையம் கிராமம்**

---




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

| | |
|---|---|
| ☞ நோயற்ற வாழ்வு | ☞ குடும்ப அமைதி |
| ☞ கல்வியில் மேன்மை | ☞ கர்மயோக வாழ்க்கைநெறி |
| ☞ சுற்றுப்புற சுகாதாரம் | ☞ மனிதநேயம் |
| ☞ முதியோரைப் பாதுகாத்தல் | ☞ மதநல்லிணக்கம் |
| ☞ மகளிர் மேம்பாடு | ☞ சமுதாய விழிப்புணர்வு |

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# ஈரோடு மண்டலம்
# ஈரோடு மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# சின்னியம்பாளையம் கிராமம்

---

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை....3
2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்....4
3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்....4
4. தொடக்க விழா அழைப்பிதழ்....5
5. சின்னியம்பாளையம் கிராமத்தின் தொடக்கவிழா....6
6. மருத்துவ முகாம்....8
7. மனநல ஆலோசனை முகாம்....8
8. மனநல ஆலோசனை முகாம்....8
9. மதுஒழிப்பு ஆலோசனை முகாம்....9
10. மரக்கன்று வழங்குதல் & சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்....9
11. உலகநல வேள்வி தினம் & பிரம்ம ஞானம் பயிற்சி....9
12. அனுபவ உரை....10
13. நிறைவு விழா நிகழ்ச்சி நிரல்....19
14. எதிர்காலத் திட்டங்கள்:....20
15. வாழ்த்து:....20

# 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information |
|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | **சின்னியம்பாளையம்** |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **15.10.2022** |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **21.05.2023** |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **7 மாதங்கள்** |
| 5. | மண்டலம் | **ஈரோடு** |
| 6. | அறக்கட்டளை | **ஈரோடு** |
| 7. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | *ஆண்:208 பெண்:323 மொ:531* |
| 8. | கிராமத்தில் உடற்பயிற்சி பயின்றவர்கள் ***(students below 14 )*** | *ஆண்:18 பெண்:16 மொ:34* |
| 9. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | *ஆண்:208 பெண்:323 மொ:531* |
| 10. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | *ஆண்:205 பெண்:303 மொ:508* |
| 11. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | *ஆண்:194 பெண்:300 மொ:494* |
| 12. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி | *ஆண்:109 பெண்: 190 மொ:299* |
| 13. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி | *ஆண்:64 பெண்:115 மொ:179* |
| 14. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி | *ஆண்:55 பெண்:100 மொ:155* |
| 15. | பிரம்மஞானம் பயிற்சி | *ஆண்:19 பெண்:55 மொ:74* |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன் அவர்களால் **265-**வது கிராமமாக ***சின்னியம்பாளையம்*** கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் **15.10.2022**–ஆம் தேதியிலிருந்து **21.05.2023-**ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. தொடக்க விழா அழைப்பிதழ்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

### நிகழ்ச்சி நிரல்

மாலை

5.30 மணி : கொடியேற்றம் மற்றும் மரக்கன்றுகள் நடுதல்.

5.45 மணி : இறைவணக்கம், குரு வணக்கம், தவம்

6. 00 மணி : வரவேற்புரை : பேரா. **V.M. வெங்கடாசலம்** அவர்கள்,
தலைவர், WCSC-ஈரோடு மண்டலம்.

முன்னிலை வகிப்பவர்கள் :

பேரா. **G.பாலமுருகன்** அவர்கள், இணை இயக்குனர், WCSC-VSP.

அருள்நிதி. **K. குரு ரங்கதுரை** அவர்கள்,
ஒருங்கிணைப்பாளர், WCSC-VSP.

பேரா. **M.R. ஸ்ரீனிவாசன்** அவர்கள், துணைத்தலைவர் (VSP),
ஈரோடு மண்டலம்.

பேரா. **M. நடராஜன்** அவர்கள், துணைத்தலைவர் (VSP),
ஈரோடு மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை.

6.05 மணி : விருந்தினரை கௌரவித்தல் மற்றும் மரக்கன்றுகள் வழங்குதல்

6.10 மணி : திட்ட அறிமுக உரை :

அருள்நிதி. **P.முருகானந்தம்** அவர்கள்,
இயக்குனர், WCSC-VSP.

6.20 மணி : தலைமையுரை :

திரு. **E.R.குமாரசாமி கவுண்டர்** அவர்கள்,
தலைவர், ஈரோடு மாவட்ட விவசாயிகள் சங்கம்.

6.25 மணி : திட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரை

அருள்நிதி. **SKM.மயிலானந்தன்** அவர்கள்,
சமூக சேவைக்காக பத்மஸ்ரீ விருது பெற்றவர்,
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்.

6.40 மணி : கிராமியக் கலை நிகழ்ச்சி

**அருமைக் கலைக்காரியாலயம்** குழுவினர், திருச்சி.

7.40 மணி : நன்றியுரை : து.பேரா. **T.R.ஆறுமுகம்** அவர்கள்,
செயலாளர், WCSC-ஈரோடு மண்டலம்.

உலக நல வாழ்த்து

## 5. சின்னியம்பாளையம் கிராமத்தின் தொடக்கவிழா

***Dr.M.Chandrasekar, SKM Animal feeds and Foods Private Limited*** அவர்களின் நிதி உதவியுடன் **ஈரோடு மண்டலம்**, **ஈரோடு** மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, **15.10.2022 -**ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ. அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களால் உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும் **சின்னியம்பாளையம்** கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.













**உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி**







## 6. மருத்துவ முகாம்

***02.02.2023*** அன்று **சின்னியம்பாளையம்** கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் *235* அன்பர்கள் கலந்துகொண்டனர்.




## 7. (1.) மனநல ஆலோசனை முகாம்

*13.12.20222* அன்று ***Dr.A.S.Ramesh,*** அவர்களால் **மன நல ஆலோசனை முகாம்** நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் மொத்தம் *70* பேர் கலந்துகொண்டனர். தனி நபர் ஆலோசனை *20* பேருக்கு வழங்கப்பட்டது.




## 8. (2). மனநல ஆலோசனை முகாம்

*06.04.2023* அன்று ***Dr.A.S.Ramesh,*** அவர்களால் **மன நல ஆலோசனை முகாம்** நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் மொத்தம் *37* பேர் கலந்துகொண்டனர். தனி நபர் ஆலோசனை *10* பேருக்கு வழங்கப்பட்டது.




## 9. மதுஒழிப்பு ஆலோசனை முகாம்

*28.02.2023* அன்று ***Thiru. Jagadeesan, Alcoholic Anonymous Association*** அவர்களால் மதுஒழிப்பு ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் மொத்தம் *36* பேர் கலந்துகொண்டனர் . தனி நபர் ஆலோசனை *13* பேருக்கு வழங்கப்பட்டது .





## 10. மரக்கன்று வழங்குதல் & சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

15.03.2023 அன்று **சின்னியம்பாளையம்** கிராம மக்களுக்கு ***A/N.Rajeshwaran*** **அவர்களால்** *120* மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கிராம மக்கள் மொத்தம் *100* அன்பர்கள் கலந்துகொண்டனர். மேலும் கிராம மக்களுக்கு *120* மக்கும் மற்றும் மக்கா குப்பைத் தொட்டிகள் *200* வழங்கப்பட்டது.





## 11. உலகநல வேள்வி தினம் & பிரம்ம ஞானம் பயிற்சி

**சின்னியம்பாளையம்** கிராமத்தில் *01.01.2023* அன்று உலக நல வேள்விதினம் நடைபெற்றது. இதில் கிராம அன்பராகள் *60* பேர் கலந்துகொண்டனர். *25.04.2023 & 10.05.2023* பிரம்மஞானம் வகுப்பில் *74* அன்பர்கள் கலந்து கொண்டனர்.





## 12. அனுபவ உரை

| Village Name | | Chinniyampalaiyam | | Name of the Professors | Prof.K.Paneerselvam | Date of Start | 15-10-2022 | | 98.25 % | Maximum | No. of Responses | 30 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sponsor Name | | Dr.M.Chandrasekar, SKM Animal feeds and Foods Private Limited | | | Prof.P.Vijayarani | Date of Closing | 21-05-2023 | | 25.00 % | Minimum | | |
| Sl No. | Feedback Questions | Average Performance | Padmavathi | N. Mohanasundari | J. Ravindraselvi | S. Susiladevi | S. Jaayamani | J. Lokanaygi | D. Senthilkumar | D. Mallika | V. Saraswati | V. Kurinchivendan |
| | | | F | F | F | F | F | F | M | F | F | M |
| 1 | To what extent the physical exercises are helpful and effective to you? | 3.87 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 3 | 4 | 4 |
| 2 | To what extent your physical health has improved due to physical exercises? | 3.93 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 3 | How clean is your village now compared to before the village was adopted? | 3.87 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 4 | Were you able to completely control your addiction to tobacco/ alcohol/ drug? | 3.86 | | | | | | | | | | 4 |
| 6 | Are you able to remember things? | 3.77 | 4 | 4 | 4 | 3 | 4 | 4 | 4 | 3 | 4 | 4 |
| 8 | How much of control have you gained on your anger? | 3.63 | 4 | 4 | 3 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 9 | To what extent your Mental health has calmed due to SKY Meditation? | 3.77 | 4 | 4 | 3 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 10 | What are your levels of tolerance to accept others behavior and maintain cordial relationship? | 3.7 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 11 | To what extent are you able to adjust with your family and friends? | 3.77 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | How much are you able to sacrifice to take the relationship forward? | 3.8 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 13 | To what extent are you able to eradicate your worries to maintain a healthy life? | 3.7 | 3 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 14 | How much are you able to moralize your desires to be contented? | 3.6 | 4 | 3 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 15 | How satisfied are you with the change in your children's attitude? | 3.9 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 16 | How satisfied are you with the change in your children's focus towards education? | 3.66 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 19 | If you were under depression before joining SKY, are you out of depression now? | 3.88 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 3 | 4 | 4 |
| 20 | How do you rate your village professors coaching and behavior? | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 21 | Health Improvements Resolved | | Joint Pain Blood Pressure (BP) (BP), Sugar Control/ | Joint Pain /மூட்டு வலி, Blood Pressure (BP) (BP) | Joint Pain /மூட்டு வலி, Blood Pressure (BP) (BP) | Joint Pain /மூட்டு வலி, Blood Pressure (BP) /இரத்த அழுத்தம் (BP), Sugar Control/ சர்க்கரை கட்டுப்பாடு | Blood Pressure (BP) /இரத்த அழுத்தம் (BP), Sugar Control/ | Joint Pain Blood Pressure (BP) (BP), Sugar Control/ | Not Applicable/ பொருந்தாது | Joint Pain /மூட்டு வலி | Ulcer / குடல்புண் | Migraine / Headache; மைக்கிரன் / தலை வலி, Vericose / |
| 22 | Other Suggestions & Feedbacks | | Vsp All over village Tamilnadu interduce | Very good | Very good | Very good | Very good | Very good | Keep going | Go a head | Excellent | Excellent |

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | 98% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 2 | Around 97% of participants who were addicted got recovered from Tobacco, alcohol and drug habits |
| 3 | 97% of the participants are out of the depression compared to before joining the program |
| 4 | Around 97% of the participants of the people now keep the village cleaner than before |
| 5 | 94% of the participants are able to remember things |
| 6 | 94% of the participants are extent their Mental health has calmed due to SKY Meditation |
| 7 | 83% (418) of the participants have made progress in family peace |
| 8 | Due to SKY Exercises and meditation-251 participants cured of joint pain, 150 participants cured of Sugar problemme and Blood Pressure, 84 participants cure of migraine and headache, 67 participants cured of Asthma and Breathing problemme,50 participants cured of Ulcer, 32 women participants cured of Menstrual problems / PCOD. |
| 9 | **98% of the participants are happy with the VSP Programme compared to only 55% before joining the program.** |

## Feedback Trend



வாழ்க வளமுடன்

குரு வாழ்க

வாழ்க வையகம்



பெயர்: P. நீலாவதி
வயது: 47
ஊர்: சின்னியம் பாளையம்

நான் சின்னியம்பாளையம் கிராமத்தில் கடந்த 20 வருடங்களாக வசித்துவருகிறேன். எனக்கு நெஞ்சு எரிச்சல் நெஞ்சு கரிப்பு, நெஞ்சு கட்டையாக அழுத்துதல் ஆகிய தொந்தரவு 3 வருடங்களாக இருந்து கொண்டிருந்தது. மருத்துவரிடம் சென்று மருத்துவம் பார்த்தும் சரியாக வில்லை. மனவளக்கலை யோகா பயிற்சியில் சேர்ந்து "மூச்சு பயிற்சி" செய்த பிறகு அனைத்து வாத மான தொந்தரவுகளும் அறவே நீங்கி விட்டது. அல்சர் முழுமையாக சரியாகி விட்டது.

"காய கல்ப பயிற்சி" செய்த பிறகு மாதவிடாய் காலங்களில் தொந்தரவு அறவே நீங்கி விட்டது. "மகராசனம் பயிற்சி" செய்த பிறகு பேக்பெயின் மற்றும் இடுப்பு வலி அறவே நீங்கி விட்டது. பயிற்சி எடுப்பதற்கு முன் கோபம் அதிகம் வரும். பயிற்சியில் சேர்ந்த பிறகு கோபம் அறவே வருவதில்லை. இந்த பயிற்சி என் குடும்ப வாழ்க்கையை மிகவும் சந்தோஷமாக வாழ வழி வகை செய்துள்ளது.

இந்த கிராமிய சேவை திட்டத்தை சின்னியம்பாளையம் கிராமத்திற்கு கொண்டுவந்த S.K.M ஐயா அவர்களுக்கு நன்றி. S.K.M. நிறுவனம் மற்றும் S.K.M. குடும்பத்தில் உள்ள அனைவரும் வாழ்க வளமுடன்.

எங்களுக்கு சிறப்பாக பயிற்சி அளித்த பேராசிரியர் Ku. பன்னீர் செல்வம் ஐயா மற்றும் பேராசிரியர் P. ஜெயராணி அம்மா அவர்களது அன்புக் குடும்பம் வாழ்க வளமுடன்

இப்படிக்கு,
P. Neelavathi.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



எனது பெயர்:

கி. அண்ணாதுரை

எனது வயது: 50

நான் சின்னியாம்பாளையத்தில் வசித்து-வருகிறேன். எங்கள் ஊருக்கு மனவளக்கலை யோகாவில், கிராமிய சேவை திட்டம் தொடங்கப்பட்டது, ஆசிரியர்கள் எங்களை பயிற்சிக்கு அழைத்தனர், நானும் பயிற்சியில் கடந்த ஆறு மாத காலமாக கலந்துகொண்டு பயிற்சி பெற்று வருகிறேன். மேற்கண்ட பயிற்சியில் உடற்பயிற்சி, காயகல்ப பயிற்சி, அகத்தாய்வு பயிற்சி பெற்ற பிறகு கோபம் குறைந்துள்ளது. குடும்பத்தில் நல்ல உறவு மேம்படுகிறது. உறவினர் மற்றும் நண்பர்களுடன் சந்தோஷமாக இருக்கிறேன். காயகல்ப பயிற்சியினால் நரம்பு பிரச்சனை குறைந்துள்ளது. இந்த பயிற்சியை எங்கள் கிராமத்திற்கு கொண்டு வந்த SKM-ம் குடும்பத்தினருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு

கி. அண்ணாதுரை



வாழ்க வையகம் குரு வாழ்க வாழ்க வள

பெயர் : A. சந்திரமல்லி

வயது : 56

ஊர் : சின்னியம்பாளையம்

நான் சின்னியம்பாளையம் கிராமத்தில் கடந்த
50 ஆண்டுகளாக வசித்து வருகிறேன், கடந்த
4 ஆண்டுகளாக சர்க்கரைநோய் வந்து விட்டது. நோய்
வந்த பிறகு மருந்து வாங்கி ஒன்று பரிசோதனை
செய்து மாத்திரைகள் எடுத்துக் கொண்டேன்
ஆனால் சர்க்கரை அளவு குறையாமல் இருந்
எளிய முறையோக மற்றும் மனவளக் கலை
பயிற்சி எடுத்த பிறகு சர்க்கரையின் அள
சரியாக உள்ளது இந்த பயிற்சியின
எனது மனம் மிகவும் சந்தோஷமாக உ
இந்த கிராமிய சேவை திட்டத்தை சின்ன
பாளையம் கிராமத்திற்கு கொண்டு வந்த SK.M
குடும்பத்தில் உள்ள அனைவரும் வாழ்க வளமுட
எங்களுக்கு சிறப்பாக பயிற்சி அளித்த பேரா
K. பன்னீர் செல்வம் ஐயா மற்றும் பேராசி
P விஜயராணி அம்மா அவர்களும் அவர் கு
அன்புக் குடும்பம் வாழ்க வளமுடன்

இப்படிக்கு
A சந்திரமல்லி

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



எனது பெயர்: C. ராஜு
வயது: 55
ஊர் - சின்னியம்பாளையம் கிராமம்
ஈரோடு.

வாழ்க வளமுடன். நான் சின்னியம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்களது ஊரில் மனவளக்கலை யோகா பயிற்சி சொல்லி தருவதாக ஆசிரியர்கள் என்னை பயிற்சி செய்ய அழைத்தார்கள். நான் கடந்த ஒரு மாத காலமாக மனவளக்கலை பயிற்சி செய்து வருகிறேன். பயிற்சியின் முன்னதாக எனக்கு நடந்தால் மூச்சு வாங்கும் சீராக இல்லாமல் இருந்தது, கால்கள் இரண்டும் மடக்க முடியாமல் இருந்தது. வாயு தொல்லை இருந்தது. பயிற்சிக்கு பிறகு இந்த மூன்று பிரச்சனைகளும் நீங்கி சீராக உள்ளது. தொப்பை குறைந்து உடல் புத்துணர்ச்சி அடைகிறது. பயிற்சி மனவளக்கலை பயிற்சிக்கு பெரிதும் உதவி புரிந்த S.K.M. மையத்திற்கும் ஐயா அவர்களுக்கும் வாழ்க வளமுடன்

இப்படிக்கு
28/4/23 ராஜு

வாழ்க வையகம் குரு வாழ்க வா



பெயர் : E. சம்பூர்ணம்

வயது : 65

ஊர் : சின்னியம்பாளையம்

நான் சின்னியம்பாளையம் கிராமத்தில் 40 வருடங்களாக வசித்து வருகிறேன். கடந்த இரண்டு வருடங்களாக எனக்கு இடுப்பு வலி, மற்றும் மூட்டுவலி தொடர்ந்தாவு இருந்தது. மருத்துவரிடம் சென்று மருந்துகள் மற்றும் ஊசிகள் போட்டும் சரியாகவில்லை. இந்த எளிய முறையாக பயிற்சி மற்றும் யோக மனவளக்கலை பயிற்சியில் சேர்ந்து 'மகராசனம்' செய்த பிறகு இடுப்பு வலி சரியாகி விட்டது. கால் பயிற்சி செய்த பிறகு மூட்டுகளில் வலி சரியாகிவிட்டது. இந்த பயிற்சியினால் என் குடும்ப வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக உள்ளது. இந்த கிராமிய சேவை திட்டத்தை கொண்டு வந்த S.K.M ஐயா அவர்களுக்கு நன்றி. S.K.M. நிறுவனம் மற்றும் S.K.M குடும்பத்தில் உள்ள அனைவரும் வாழ்க வளமுடன்.

எங்களுக்கு சிறப்பாக பயிற்சி அளித்த யோகாசிரியர் K. பன்னீர் செல்வம் ஐயா மற்றும் யோகாசிரியை P. விஜயராணி அம்மா அவர்களது அன்புக் குடும்பம் வாழ்க வளமுடன்.

இப்படிக்கு

E சம்பூர்ணம்



வாழ்க வையகம் வாழ்க

வணக்கம்,

என் பெயர் D.செல்வி என் வயது 62 நான் சின்னியம் பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு உடல் சற்று எப்பொழுதும் சோர்வாக இருக்கும்.

எங்கள் ஊருக்கு கிராமிய சேவை திட்டத்தின் மூலம் மன மனவளக்கலை பயிற்சிகள் சொல்லித் தருவதாக ஆசிரியர்கள் வந்து அழைத்தார்கள் நானும் அதில் கலந்து கொண்டேன் அதற்கு பிறகு எனது உடல் சுறுசுறுப்பு அடைந்தது.

குருவுக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றி
S.K.M. குடும்பத்தாருக்கும் நன்றி

வாழ்க வளமுடன்

இப்படிக்கு
D.செல்வி

நாள்: 3.5.2023
இடம்: சின்னியம்பாளையம்

## 13. நிறைவு விழா நிகழ்ச்சி நிரல்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

### நிகழ்ச்சி நிரல்

காலை

10.00 மணி : கொடியேற்றம், ஆரோக்கியமான அமைதி கிராமம் போர்டு திறப்பு

10.15 மணி : இறைவணக்கம், குரு வணக்கம், தவம்

10.30 மணி : வரவேற்புரை : பேரா. **V.M.வெங்கடாசலம்** அவர்கள்,
தலைவர், WCSC-ஈரோடு மண்டலம்.

முன்னிலை வகிப்பவர்கள் :

திட்ட நன்கொடையாளர் :

**Dr.M.சந்திரசேகர்** அவர்கள்,
நிர்வாக இயக்குனர்,
அனிமல் பீட்ஸ் அண்ட் புட்ஸ் (இந்தியா) (பி) லிட்., ஈரோடு.
அறங்காவலர், அறிவுத்திருக்கோயில், ஆழியாறு.

பேரா.**G.பாலமுருகன்** அவர்கள், இணை இயக்குனர், WCSC-VSP.

பேரா. **M.R.ஸ்ரீனிவாசன்** அவர்கள்,
துணைத்தலைவர் (VSP), ஈரோடு மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை.

பேரா. **M. நடராஜன்** அவர்கள்,
துணைத்தலைவர் (VSP), ஈரோடு மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.

10.35 மணி : விருந்தினரை கௌரவித்தல்

10.40 மணி : செயல்பாட்டு உரை : அருள்நிதி. **P.முருகானந்தம்** அவர்கள்,
இயக்குனர், WCSC-VSP.

10.50 மணி : தலைமையுரை : திரு. **E.R.குமாரசாமிகவுண்டர்** அவர்கள்,
தலைவர், ஈரோடு மாவட்ட விவசாயிகள் சங்கம்.

10.55 மணி : தலைவரைப் பற்றிய அறிமுகம்

11.00 மணி : திட்டத்தை நிறைவு செய்து சிறப்புரை

அருள்நிதி.**SKM.மயிலானந்தன்** அவர்கள்,
சமூக சேவைக்காக பத்மஸ்ரீ விருது பெற்றவர்,
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்.

11.10 மணி : **அனுபவ உரை படக்காட்சி**

11.20 மணி : **கிராமியக் கலை நிகழ்ச்சி**
**சின்னியம்பாளையம் கிராமிய அன்பர்கள்**

11.40 மணி : நன்றியுரை : து.பேரா.**T.R.ஆறுமுகம்** அவர்கள்,
செயலாளர், WCSC-ஈரோடு மண்டலம்.

உலக நல வாழ்த்து

## 14. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க **சின்னியம்பாளையம்** கிராமம், **ஈரோடு** மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 15. வாழ்த்து:

**ஈரோடு** கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், **பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன்** அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய ***Dr.M.Chandrasekar, SKM Animal feeds and Foods Private Limited*** அவர்களுக்கும் இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த **ஈரோடு** மண்டல பொறுப்பாளர்களுக்கும், **ஈரோடு** மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் ***Prof.K.Paneerselvam & Prof.P.Vijayarani*** அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய ***VSP* நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு** உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

***உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை***
***உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.***
***உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே***
***உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.***

***-வேதாத்திரி மகரிஷி***

*தொண்டாற்றி இன்பம் காண்போம்!* *நன்றி, வாழ்க வளமுடன்!*

*குருவின் சேவையில்*
*WCSC-VSP இயக்குனரகம்*
*அறிவுத்திருக்கோயில், ஆழியார்*